1973 பிப்ரவரி 7]

அமைதியாக, ஒழுங்காக, சட்டப் பேரவையின் மரபுகளை, பண்பு களை காப்பாற்றும் வகையில் நடத்திச் செல்லவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. 'என்னை வேண்டுமானால் வெளியேற்றுங்கள்' என்றால் டாக்டர் ஹாண்டே அவர்களை வெளி யேற்றுவதற்கு நிரம்ப நேரம் ஆகாது. இராணுவத்தை வரவழைக்க வேண்டியதில்லை. நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் அது போல இதுவரைக்கும் நடந்ததில்லை. நான் அதனைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரா? அவர் விரும்பினாலும் நான் அதைச் செய்யத் தயாராய் இல்லை.

முன்னுரையில்லாமல், சுருக்கமாக, நேரிடையாக கேள்வி போட விரும்பினால் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் கேள்வி போடலாம்.

THIRU K. T. K. THANGAMANI: உறுப்பினர்கள் துணைக் கேள்வி போடுவதே is not only for the purpose of eliciting information but also for the purpose of compelling the Ministers to take certain action. What Dr. Hande wanted to impress is this. Government have opened number of fair price shops. He wanted to compel them not to open fair price shops here after route the thing through co-operatives. That was perfectly within his......right. It arises directly from the answer to original question.

MR. DEPUTY SPEAKER: How long can one take to put a supplementary question?

THIRU K. T.K. THANGAMANI: If the question is of such a nature supplementaries have to be put. If necessary half an hour discussion may be allowed. In the Lok Sabha, whenever Members have not exhausted supplementaries to a particular question, half-hour discussion is allowed. Such half-an hour discussion may be allowed here also.

புலி இனப் பெருக்கம்

* 57 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலிகள் வாழும் காடுகள் தமிழகத்தில் எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : புலிகள் வாழும் காடுகள் தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட வனக் கோட்டங்களில் உள்ளன :—

(1) ஓசூர்.
(2) தர்மபுரி
(3) கோயம்புத்தூர் வடக்கு
(4) மத்தியக் கோயம்புத்தூர்
(5) கோயம்புத்தூர் தெற்கு
(6) நீலகிரி வடக்கு
(7) நீலகிரி தெற்கு
(8) மதுரை தெற்கு
(9) மதுரை வடக்கு
(10) இராமநாதபுரம் (ஸ்ரீவில்லிப்புத்தூர் சரகம்)
(11) திருநெல்வேலி வடக்கு
(12) திருநெல்வேலி தெற்கு

இவற்றைத்தவிர நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புலிகள் உய்விடத்திலும் புலிகள் காணப்படுகின்றன.

* 58 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether it is a fact that an officer of the State Government has been deputed to Dehra Dun for training in tiger breeding and census; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, மாநில வன விலங்கு அலுவலர் திரு. மஹமது பஷீரை, டேராடூனிலுள்ள வன ஆராய்ச்சி நிலையம், மற்றும் கல்லூரியில், புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி பெறுவதற்காக, தமிழ்நாடு அரசு சென்ற மார்ச் திங்களில் அனுப்பிவைத்தது. பயிற்சிக் காலம் 3—3—1972 முதல் 12—3—1972 முடிய. மாநிலத்தில் சென்ற மே மாதம் நடைபெற்ற